DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 237/2025

Miscellaneous :

Sessions : PW 7

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | கயல்விழி |
| Father / Husband Name | யுவராஜ் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 10.03.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் உயர் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.05.2025 ம் தேதி மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் நான் பணியில் இருந்தபோது இரவு 8.40 மணியளவில் விநாயகம் என்பவர் தன்னை 4 தெரிந்த நபர்கள் கத்தி மற்றும் கோடாரி கொண்டு இரவு 7.00 மணியளவில் தன்னுடைய வீட்டருகே தாக்கியதாக சிகிச்சைக்கு வந்த நபரை பரிசோதித்தபோது அவருக்கு இடது தலை பகுதியில் 3x1 Cm அளவில் கிழிந்த காயம் ஏற்பட்டது. அவரை உள் நோயாளியாக சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொர்ப்ப காயம் என்று சான்று வழங்கினேன். **(விநாயகத்திற்கு வழங்கிய விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**2.** பின்னர் அன்றைய தினம் 8.45 மணிக்கு நீலா என்பவர் தன்னை 4 தெரிந்த நபர்கள் கையால் உடல் முழுவதும் தாக்கியதாக சிகிச்சைக்கு வந்த நபரை பரிசோதித்தபோது அவருக்கு உடல் முழுவதும் வலி இருப்பதாக சொன்னார். நான் அவரை உள்நோயாளியாக சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொர்ப்ப காயம் என்று சான்று வழங்கினேன். **(நீலாவிற்கு வழங்கிய விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**3.** பின்னர் அன்றைய தினம் 8.50 மணிக்கு கௌசல்யா என்பவர் தன்னை 4 தெரிந்த நபர்கள் கையால் அவரது வலது கையில் தாக்கியதாக சிகிச்சைக்கு வந்த நபரை பரிசோதித்தபோது அவருக்கு வலது கையில் 3x0.5 cm அளவில் கிழிந்த காயம் இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயம் சொர்ப்ப காயம் என்று சான்று வழங்கினேன். **(கௌசல்யாவிற்கு வழங்கிய விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

4. விநாயகம் என்பவரை நீலா என்பவர் சிகிச்சைக்கு அழைத்துவந்தார் என்றால் சரிதான். நீலாவின் விபத்து பதிவேட்டில் கௌசல்யா என்பவர் அழைத்துவந்ததாக

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கௌசல்யாவின் விபத்து பதிவேட்டில் நீலா என்பவர் அழைத்துவந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீலா என்பவருக்கு வெளிக்காயம் எதுவும் இல்லை என்றால் சரிதான். நீலா என்பவர் வலி இருப்பதாக பாசாங்கு செய்யலாம் என்றால் சரிதான். நீலா மற்றும் கௌசல்யா ஆகியோர் அவர்களை 4 நபர்கள் கையால் அடித்ததாக என்னிடம் சொன்னார்கள். விநாயகம் என்பவர் அதே 4 நபர்கள் கத்தி, கோடாரி போன்ற ஆயுதங்களால் தாக்கியதாக கூறினார் என்றால் சரிதான். நீலா என்பவரை கையால் தாக்கியிருந்தால் கிழிந்த காயம் ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. காயத்தின் அளவு மிகச்சிறியது என்பதால் ஏற்பட வாய்ப்பு உள்ளது. விநாயகத்தை கத்தி மற்றும் கோடாரி கொண்டு தாக்கியிருந்தால் விபத்து பதிவேட்டில் கண்டதை விட பெரிய காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல.